அச்சிட்டோர்: அரசு மைய அச்சகம், சென்னை 600 001.

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## மானியக் கோரிக்கை எண். 36

அறிவிப்புகள்
2023 - 2024

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மானியக் கோரிக்கை எண். 36

அறிவிப்புகள்

2023 - 2024

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

நிதி மற்றும் மனித வள

மேலாண்மைத் துறை அமைச்சர்

1) தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின்கீழ் புதுமைகளை புகுத்துவதற்காகவும், காலநிலை பாதிப்பற்ற மற்றும் வளம் குன்றா எதிர்கால வளர்ச்சிக்காகவும், அதிநவீன தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் வகையில் ஆளுகைக்கான புத்தாக்க மையம், மாநிலத் திட்டக் குழுவில் அமைத்தல்.

**(Centre for Innovation in Governance will be formed in the State Planning Commission under the Tamil Nadu Innovative Initiatives (TANII) to work with cutting edge institutions to bring in innovation in Governance, which is futuristic, climate friendly and sustainable).**

அரசுத் துறைகள், மாவட்ட நிர்வாகம் அதிநவீன தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து புதுமைகளை செயல்படுத்தவும், மக்களுக்குப் பொதுச் சேவைகள் அளிக்க தடையாக உள்ள சிக்கல்களை மற்றும் சவால்களை கண்டறிந்து அவற்றை புதுமையான முயற்சிகள் மூலம் தீர்வுகாணும் திட்டங்களை கண்டறிந்து நல் ஆளுமையில் புதுமைகளை புகுத்துவதற்கு ஏதுவாக ஆளுகைக்கான புத்தாக்க மையம் உருவாக்கப்படும்.

2) கூடுதல் தகவல் தொழில்நுட்ப வசதியை வழங்குவதன் மூலம் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் செயலாற்றல் திறனை மேம்படுத்துவதற்காக நவீனமயமாக்கல்.

**(Modernization of the Department of Economics and Statistics by providing additional Information Technology facilities to improve the functional efficiency).**

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் செயலாற்றல் திறனை மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப உதவியுடன் புள்ளிவிவரங்களை சேகரித்தல், தொகுத்தல், அட்டவணைப்படுத்துதல் மற்றும் அறிக்கைகளை உரிய நேரத்தில் வெளியிட்டு, அரசின் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்த பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் மாநிலத் துறைத் தலைமையிடம், 6 மண்டல அலுவலகங்கள், 32 மாவட்ட துணை இயக்குநர் அலுவலகங்கள், 75 கோட்ட புள்ளிஇயல் உதவி இயக்குநர் அலுவலகங்கள், 385 வட்டார புள்ளிஇயல் அலுவலகங்களை வலுப்படுத்தும் பொருட்டு கணினிகள், தொழில்நுட்ப வசதிகள், மென்பொருள் மேம்படுத்துதல், இணையதள மற்றும் வலைதள வசதிகளும் செயல்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்படும்.



3) ரூ.150 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து மாநில அரசு நிதியுதவி திட்டங்களில் அதிக பொதுச் செலவினங்களின் செலவுத்திறன் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் இதர ஆதாரங்களை வழங்குவதற்கு அறிக்கைகளை தயாரித்தல்.

**(Preparation of Evaluation Reports for providing valuable evidence on cost effectiveness of large public spending of all state sponsored schemes with a budget outlay of over Rs.150 Crores).**

மாண்புமிகு முதலமைச்சரின் ஆய்வுக் கூட்டத்தில் ரூ. 150 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு பெற்றுள்ள அனைத்துத் திட்டங்களையும், அதிக பொதுச் செலவுத்திறன் குறித்த மதிப்புமிக்க ஆதாரங்களை வழங்கும் பொருட்டு, மதிப்பீடு செய்ய முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டங்களை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலமாகவும் (DEAR), வெளிநிறுவனங்கள் மூலமாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளலாம்.

4) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள தொன்மை வாய்ந்த உதகை ஏரியை பாதுகாக்கும் வகையில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில், இணைப்பு கால்வாய் மற்றும் ஏரியையும் தூர்வாரி, குப்பைகளை அகற்றும் பொருட்டு ஏரியின் நுழைவு வாயிலில் சிறப்பு தானியங்கி இயந்திர அமைப்பை சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிறுவுதல்.

**(In order to conserve the Ooty Lake in the Nilgiris district, desilting works are to be undertaken in the feeder channels and the lake with installation of Automated Debris Removal System at the mouth of the lake at an estimated cost of Rs.10.00 crore under Special Area Development Programme).**

உதகை ஏரியை தூர்வாரவும், குப்பை, பிளாஸ்டிக், வண்டல் மண் போன்றவற்றை நீக்கி மீண்டும் மாசு ஏற்படாமல் தடுக்க, தொழில்நுட்ப தடுப்பு முறைகளை பயன்படுத்தி, சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் மூலம் ரூ.10.00 கோடி செலவில், கோடப்பமந்து முதல் ஏரி வரை தூர்வாரும் திட்டத்தை செயல்படுத்த, ஏரியின் நுழைவு வாயிலில் தானியங்கி சுத்தப்படுத்தும் அமைப்பு ஏற்படுத்தப்படும்.



5) நீலகிரி மாவட்டத்தின் 200வது ஆண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியின மக்களின் வளமான இயற்கை மற்றும் கலாச்சார வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம் அமைத்தல்.

**(A Nilgiris Heritage Museum and an Experience Centre will be set up to mark 200 years of celebration to showcase the rich tribal natural and cultural history of the Nilgiris at an estimated cost of Rs.10.00 crore under Special Area Development Programme).**

நீலகிரி மாவட்டத்தின் வளமான மானுடவியல், பழங்குடியின மக்களின், இயற்கை மற்றும் கலாச்சார வரலாற்றை வெளிப்படுத்தும் நோக்கத்துடன், மாவட்டத்தின் தனித்துவமான வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் ஆழமான மற்றும் உள்ளார்ந்த அனுபவத்தை வழங்க அதிநவீன தொழில்நுட்பத்துடன் பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம் ஏற்படுத்தப்படும். நீலகிரி பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம், நீலகிரி மாவட்டத்திற்கு கூடுதல் மதிப்பு ஏற்படுத்தக்கூடியதாகவும், உலகம் முழுவதிலுமிருந்தும் பார்வையாளர்களை ஈர்த்து உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த ஏதுவாக இருக்கும்.

6) நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் துறையை தன்னிறைவு அடையச் செய்வதற்கான சிறப்பு மற்றும் விரிவான தொகுப்பு - ரூ.2.50 கோடி செலவில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்தல்.

**(An amount of Rs.2.50 crore will be sanctioned under Special Area Development Programme for the Special and Comprehensive Package to make the Small Tea Growers' sector self-reliant in the District of Nilgiris).**

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் துறையை தன்னிறைவு அடையச் செய்ய, "சிறப்பு மற்றும் விரிவான தொகுப்பு" என்ற சிறப்புத் திட்டம், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.



7) சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளை சேர்த்தல்.

**(Inclusion of Eastern Ghats in the Special Area Development Programme).**

கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள ஜவ்வாது மலை (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்), சேர்வராயன் மலை (சேலம் மாவட்டம்), கல்வராயன் மலை (கள்ளக்குறிச்சி மாவட்டம்), கொல்லிமலை (நாமக்கல் மாவட்டம்), பச்சைமலை (பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாவட்டங்கள்) ஆகிய மலைப்பகுதிகளில், இப்பகுதிகளின் பல்லுயிர் பாதுகாப்பின் மூலம் முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்ய, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

8) மதுரையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்ட மண்டல அலுவலகம் அமைத்தல்.

**(Establishment of Special Area Development Programme Regional Office at Madurai).**

தெற்கு மாவட்டங்களில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்துவதை கண்காணிக்க மற்றும் மேற்பார்வையிடும் பொருட்டு, மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் அமைக்கப்படும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
நிதி மற்றும் மனித வள
மேலாண்மைத் துறை அமைச்சர்